இளையான்குடி வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை: திருமதி.க.சாந்தி

ந.க. பி6/2968/2021 நாள்: 7.01.2022

பொருள் : மனை பிரிவுகள் வரன்முறை - இளையான்குடி ஊராட்சி ஒன்றியம் - கோட்டையூர் ஊராட்சி - நில அளவை எண்கள்: 166/4A, 166/4B -ல் அமைந்துள்ள அனுமதியற்ற மனை எண் 4,5,6,7,18,19,20,21,22,23 மற்றும் 24 ஆகிய மனைகளுக்கு - வரன்முறைப்படுத்தி-ஆணையிடல்.

பார்வை : 1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சிவகங்கை மண்டலம், அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்: 2060/2018/சிமா-4 நாள்: 23.10.2018.
2. ஊராட்சி மன்ற தலைவர், கோட்டையூர் ஊராட்சி தீர்மான நகல் எண்: 89 நாள்: 08.12.2021
3. திரு.பிரான்சிஸ் சேவியர், என்பவரது மனு வரப்பட்ட நாள்: 05.01.2022.

******

ஆணை:

சிவகங்கை மாவட்டம், இளையான்குடி ஊராட்சி ஒன்றியம், கோட்டையூர் ஊராட்சி நில அளவை எண்கள்: 166/4A, 166/4B -ல் அமைந்துள்ள அனுமதியற்ற மனை எண்கள்: 4,5,6,7,18,19,20,21,22,23 மற்றும் 24 பார்வை-1ல் காணும் நடவடிக்கைகளின் வாயிலாக கொள்கை அளவிலான ஒப்புதல் வரப்பெற்றுள்ளதை தொடர்ந்து கீழ்கண்ட வழிகாட்டு நெறிமுறைகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்தப்படுகிறது.

மேற்காணும் மனைக்கு கீழ்க்கண்டவாறு கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளது.

1. பரிசீலனை கட்டணம்: 1-மனைக்கு தலா ரூ.500/-வீதம் 28 மனைக்கு இணையதள வாயிலாக ரூ.14000/-வீதம் 09.04.2018 அன்று நகர் ஊரமைப்பு துறை அலுவலகத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது.

2. வரன்முறைப்படுத்தும் கட்டணம்: - ச.மீ 1ற்கு ரூ.45/- வீதம் மனை எண்கள்: 4,5,6,7,18,19,20,21,22,23 மற்றும் 24 மொத்தம் 1867.40/- ச.மீற்கு ரூ.84033/-உரிய அரசு தலைப்பில் E-சலான் மூலம் 05.01.2022 அன்று செலுத்தப்பட்டுள்ளது.

3. வளர்ச்சிக்கட்டணம் : ச.மீ 1ற்கு ரூ.25/- வீதம் மனை எண்கள்: 4,5,6,7,18,19,20,21,22,23 மற்றும் 24 மொத்தம் 1867.40/- ச.மீ.ற்கு கோட்டையூர் ஊராட்சி பல்வகை வரவு ரசீது எண்: 64780 நாள்: 05.01.2022 மூலம் ரூ.46685/- செலுத்தப்பட்டுள்ளது

எனவே இளையான்குடி ஊராட்சி ஒன்றியம், கோட்டையூர் ஊராட்சிக்குட்பட்ட நில அளவை எண்கள்: 166/4A, 166/4B -ல் அமைந்துள்ள அனுமதியற்ற மனை எண்கள்: 4,5,6,7,18,19,20,21,22,23 மற்றும் 24 கீழ்க்காணும் நிபந்தனைகளின் அடிப்படையில் வரன்முறை செய்து இதன்வழி ஆணையிடப்படுகிறது.

நில உரிமம் குறித்து நில உடைமை தாரரால் வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டாலும்,இதில் எவ்விதமான முறைகேடு கண்டறியபட்டாலும், இம்மனைக்கு வழங்கப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்தப்பட்ட ஆணை எவ்வித முன்னறிவிப்பு இன்றி இரத்து செய்யப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ)
இளையான்குடி

பெறுநர்: திரு.பிரான்சிஸ் சேவியர்,
த/பெ.சந்தியாகு,
40/83 தையப்பன் தெரு,
பிராட்வே,
சென்னை 600001.

நகல்: 1.நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர்,
நகர் ஊரமைப்பு துறை அலுவலகம்,
மாவட்ட ஆட்சியர் வளாகம்,
சிவகங்கை.
2.ஊராட்சி மன்ற தலைவர்,
கோட்டையூர் ஊராட்சி,இளையான்குடி ஊராட்சி ஒன்றியம்.

D:\New folder\2021 files\B6\b6-2968-2021.docx

இளையான்குடி வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை: திரு.டி.என். அன்புத்துரை.பி.ஏ.

ந.க.பி3/ 28/2018 நாள்: 27.11.18

பொருள் : அனுமதியற்ற மனைப்பிரிவுகள் - மனைகள் வரன்முறைபடுத்துதல் - சிவகங்கை மாவட்டம் - இளையான்குடி ஊராட்சி ஒன்றியம் - கோட்டையூர் ஊராட்சி - சர்வே எண்: 166/4A & 166/4B - மனை எண் 7A,9,10,11,12,13,14, 25, 26,27, 28,29,30,31,32,33 மற்றும் 34 ற்கு - மனை- வரன் முறைப்படுத்தி - ஆணையிடல் - தொடர்பாக

படிக்கப் பட்டவை :
1. அரசாணை எண் 78, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நவ.4(3) நாள்:04.05.2017
2. அரசாணை எண் 172,வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நவ.4(3) நாள்:13.10.2017
3. சிவகங்கை மாவட்ட நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர், அவர்களின் கடிதம் ந.க.எண்:2060/2018/சிம-4 நாள்: 23.10.18.
4. உரிய ஆவணங்கள்.

********

சிவகங்கை மாவட்டம், இளையான்குடி ஊராட்சி ஒன்றியம், கோட்டையூர் ஊராட்சிக்குட்பட்ட சர்வேஎண் : 166/4A & 166/4B க்கு பார்வை 3 ல் காணும் கடிதம் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்தப்படுகிறது.

மேற்காணும் மனைகளுக்கு கீழ்க்கண்டவாறு கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளது.

1. பரிசீலனை கட்டணம்: மனை 1 ற்கு ரூ.500/- வீதம் 28 மனைக்கு ரூ.14000/- இணையதளம் வாயிலாக 09.04.18 அன்று செலுத்தப்பட்டுள்ளது.
2. வரன்முறைப்படுத்தும் கட்டணம்: - ச.மீ 1 ற்கு ரூ.30/- வீதம் 2810 ச.மீற்கு ரூ.84300/-உரிய அரசு தலைப்பில் 26.11.18 அன்று செலுத்தப்பட்டுள்ளது.

3. வளர்ச்சிக்கட்டணம் : ச.மீ 1 ற்கு ரூ.25/- வீதம் 2810 ச.மீற்கு ரூ70250/-உரிய ஊராட்சியில் 26 .11.2018 அன்று செலுத்தப்பட்டுள்ளது.

எனவே, இளையான்குடி ஊராட்சி ஒன்றியம், கோட்டையூர் ஊராட்சிக்குட்பட்ட சர்வேஎண் : 166/4A & 166/4B இல் அமைந்துள்ள மனைப்பிரிவில் அமைந்துள்ள கீழ்க்காணும் நிபந்தனைகளின் அடிப்படையில் வரன்முறை செய்து இதன்வழி ஆணையிடப்படுகிறது.

நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் இம்மனைகளுக்கு வழங்கப்பட்ட வரன்முறைப்படுத்தப்பட்ட ஆணை எவ்வித முன்னறிவிப்பு இன்றி இரத்து செய்யப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ)
இளையான்குடி

27.11.18

பெறுநர்: எஸ். பிரான்சிஸ் சேவியர்,
த/பெ.சந்தியாகு,
40,கதயப்பன் தெரு,
அம்மன் கோவில்,
சென்னை - 600079

நகல்: நகர ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர்,
சிவகங்கை.

நகல்: சார்பதிவாளர்,
இளையான்குடி

நகல்: ஊராட்சி செயலர்,
கோட்டையூர் ஊராட்சி,
இளையான்குடி ஒன்றியம்.

10

RPAD

நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர்(பொ) சிவகங்கை அவர்களின் நடவடிக்கைகள்.

முன்னிலை: திருமதி.இரா. காவியம்., டி.சி.இ.,

ந.க.எண்:2060/2018/சிம-4 நாள்:23.10.2018

பொருள்: அனுமதியற்ற மனைப்பிரிவுகள், மனைகள் வரன்முறைப்படுத்துதல் திட்டம்-2017 - நகர் ஊரமைப்பு - சிவகங்கை மண்டலம் - சிவகங்கை மாவட்டம் - இளையான்குடி வட்டம்/ஊராட்சி ஒன்றியம் — கோட்டையூர் கிராமம் - சர்வே எண்:166/4A, 166/4B-இல் 6920.12சமீ (1.71 ஏக்கர்) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள (அற்புதா நகர்) அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:

1. அரசாணை எண்:78, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நவ4(3) நாள்:04.05.2017.
2. அரசாணை எண்:172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நவ4(3) நாள்:13.10.2017.
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை-2 அவர்களின் வழிகாட்டி நெறிமுறை ந.க.எண்:13193/2017/LA2 நாள்:30.10.2017, 31.10.2017, 07.11.2017, 17.11.2017, 20.12.2017.
4. மனுதாரர் திரு.S. பிரான்சிஸ் சேவியர் அவர்களின் Online விண்ணப்பம் நாள்:09.04.2018.

******

உத்தரவு:

பார்வை 1 மற்றும் 2-இல் கண்ட அரசாணையின்படியும் பார்வை 3-இல் கண்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படியும், பார்வை 4-இல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

சிவகங்கை மாவட்டம், இளையான்குடி வட்டம்/ஊராட்சி ஒன்றியம், கோட்டையூர் கிராமம், சர்வே எண்:166/4A, 166/4B-இல் 6920.12சமீ (1.71 ஏக்கர்) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள (அற்புதா நகர்) அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ம.வ.வ.மு/ந.ஊ.து.இ(சி.ம)எண்:777/2018 என எண்ணிட்டு கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவின் மொத்த பரப்பு | : | 6920.12சமீ (1.71 ஏக்கர்) |
| விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | : | 03 |
| விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை | : | 27 |
| விற்கப்படாத மனைகளின் மொத்த பரப்பளவு | : | 4677.40சமீ |
| திறவெளி ஒதுக்கீடு (OSR) இடத்தின் பரப்பு | : | 520.88சமீ (10.02%) |

செலுத்தப்பட வேண்டிய கட்டண விபரம்:

1) பரிசீலனை கட்டணம்:

| | |
|---|---|
| இணையதளம் வாயிலாக மனை ஒன்றிற்கு ரூ.500/- வீதம் பரிசீலனைக் கட்டணம் செலுத்திய மனை எண்களின் விபரம் | 28 மனைகளுக்கு ரூ.14000/- இணையதளம் வாயிலாக செலுத்தப்பட்டுள்ளது. |

பரிசீலனைக் கட்டணம் செலுத்தப்படாத இதர மனைகளுக்கு, அக்கட்டணத்தை இணையதளம் வாயிலாக சம்பந்தப்பட்ட உரிமையாளர் செலுத்த வேண்டும்.

2) வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம்:

மேற்காண் வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் இணைய தளம் வாயிலாகவும் அல்லது கீழ்க்கண்டவாறு நேரிலும் செலுத்தலாம்.

அ) வரன்முறைப்படுத்தும் கட்டணம் செலுத்துவதற்கான அரசு கணக்குத் தலைப்பு:

| | |
|---|---|
| 0217-Urban Development-60-Other Urban Development Scheme -800, Other Receipts AT Receipts Under Regularisation charges of Unapproved Layouts and Plots – DTCP 27 Non Taxation Fees-30 Regularisation DPC:0217 60 800 AT 2730 | சதுர மீட்டருக்கு ரூபாய் 30/- வீதம் சலான் மூலம் அரசு கருவூலகத்தில் செலுத்தப்பட வேண்டும். |

ஆ) வளர்ச்சிக் கட்டணம் கீழ்க்காண் உள்ளாட்சியின் வங்கிக் கணக்கில் நேரில் செலுத்தலாம். அதனை உள்ளாட்சியின் தனிக்கணக்கில் பராமரிக்க வேண்டும்.

சதுர மீட்டருக்கு ரூபாய் 25/- வீதம் சலான் உள்ளாட்சியின் வங்கிக் கணக்கில் நேரில் செலுத்தப்பட வேண்டும்.

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்மந்தப்பட்ட உள்ளாட்சியால் வரன்முறை ஆணை வழங்கப்பட வேண்டும். விற்கப்படாத மனைகளைப் பொறுத்தமட்டில் அனைத்து மனைகளுக்கு அல்லது பகுதி மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்மந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையைப் பெற்றுக்கொள்ளலாம்.

பார்வை 1 மற்றும் 2-இல் சுட்டிய அரசாணைகளின்படி மேற்காண் கட்டணம் தவிர வேறு கட்டணம் ஏதும் உள்ளாட்சி வசூலித்தல் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**நிபந்தனைகள்:**

1. அரசாணை (நிலை)எண்:172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்:13.10.2017-இல் விதி எண்:7(g)(ii)-இன்படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.

2. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ),
சிவகங்கை மண்டலம், சிவகங்கை.

இணைப்பு:
மனைப்பிரிவு வரைபடம் -2 நகல்கள்.

பெறுநர்
வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ),
இளையான்குடி ஊராட்சி ஒன்றியம்,
சிவகங்கை மாவட்டம்.

நகல்:

1. ஊராட்சிகளின் உதவி இயக்குநர்.
   மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,
   சிவகங்கை மாவட்டம்.
   (உத்தரவு நகல் மட்டும்)

2. உதவி இயக்குநர்,
   நில அளவை மற்றும் பதிவேடுகள் துறை,
   சிவகங்கை மாவட்டம்.
   (உத்தரவு கடிதம் மற்றும் வரைபடம் ஒரு தொகுப்பு)

3. சார்பதிவாளர்,
   இளையான்குடி,
   சிவகங்கை மாவட்டம்.
   (உத்தரவு கடிதம் மற்றும் வரைபடம் ஒரு தொகுப்பு)

4. மனுதாரர்:
   திரு.S. பிரான்சிஸ் சேவியர்,
   எண்:40/83, தையப்பா தெரு,
   பிராட்வே,
   சென்னை – 600 001.

5. வைப்பறை (உத்தரவு கடிதம் மற்றும் வரைபடம் ஒரு தொகுப்பு).